


# வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ் (வீ.எச்.எஸ்)

நலிந்தோரின் விடிவெள்ளி






சென்னை மாநகரில், உடல் நலத்திற்கான சிறந்த சிகிச்சை என்பது வசதியாக இருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் என்று உணரப்பட்ட நிலையில், தொலைநோக்கு பார்வையுடைய ஒரு மனிதர், அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று ஒரு திடமான கனவு கண்டார். வாலண்டரி ஹெல்த் சர்வீசஸின் (வி.எச்.எஸ்) நிறுவனர் டாக்டர். கே. எஸ். சஞ்சீவி அவர்கள், நகரத்தின் சிறந்த மருத்துவர்கள் அவர்களே தன்னார்வத்தோடு முன் வந்து தங்களின் நேரத்தை நலிந்த நோயாளிகளுக்கு அவர்களின் நிதி நிலைமையைப் பொருட்படுத்தாமல், சிறந்த சிகிச்சை வழங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கற்பனை செய்தார். அவரின் இடைவிடாத முயற்சியாலும், சென்னையின் மருத்துவ உயரதிகாரிகளின் உயர்ந்த உள்ளத்தாலும், அவரின் உன்னத கனவு உயிர்ப்பித்தது. தலைச் சிறந்த மருத்துவர்கள் ஒரு நாளைக்கு மூன்று மணிநேரம், வாரத்தில் மூன்று நாட்கள் தங்கள் நேரத்தை நலிந்த நோயாளிகளுக்கு செலவிட உறுதியளித்தனர், இது சமூகப் பொருளாதாரத் தடைகளைத் தாண்டி, ஒரு சிறந்த தனித்துவமான, பரிவுமிக்க உடல் நல சரணாலயத்தை உருவாக்கியது.

**ஒரு தொலைநோக்கு பார்வையுடைய தலைவர்**

"வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ்" (VHS) - சென்னை நகரத்தின் தலைச் சிறந்த மருத்துவர்களிடம் பேசி, அவர்களின் நேரத்தை நோயாளிகளுக்காக செலவிட சொல்லி வற்புறுத்திய டாக்டர். சஞ்சீவி தான், VHS என்ற இந்த பெயரை உருவாக்கினார்", என்று VHS- யின் கௌரவச் செயலாளரான டாக்டர். சுரேஷ் இத்தகவலை நம்மிடம் பகிர்ந்தார். "VHS-யில் சென்னையின் சிறந்த மருத்துவர்கள் வேலையில் இருக்கின்றனர். அதற்கு காரணம், அந்த மருத்துவர்கள் வேறு இடத்தில் பணியில் இருந்தாலும், VHS-க்கு வருமாறு டாக்டர். சஞ்சீவி அவர்களிடம் கேட்டுக் கொண்டதால் தான்." டாக்டர். சஞ்சீவி, 'ஒரு குடும்பத்திற்கென முழுமையான மருத்துவ அமைப்புமுறை இருந்தால், குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் மருத்துவ பாதுகாப்பு இருக்கும்' என்று நம்பினார். அதற்காக அவர் ஒரு தனித்துவமான திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இது நோயாளிகளின் வருமானத்தின் அடிப்படையில் நான்கு குழுக்களாக வகைப்படுத்தப்பட்ட, நவீன கால சுகாதார காப்பீடு போன்றது. இலவச குழு (FG) என்பது பணம் செலுத்த முடியாதவர்களுக்கானது, குறைந்த வருமானம் கொண்ட குழு (LIG) ஆண்டுக்கு ₹7500 வரை சம்பாதிப்பவர்களுக்கானது, நடுத்தர வருமான குழுவினருக்கு (MIG) பில்லில் 30% தள்ளுபடி, மற்றும் உயர் வருமான குழுவினருக்கு (HIG) 10% தள்ளுபடி, என்று வகைப்படுத்தப்பட்டது. இதோடு, மாதம் ₹5000-க்கும் குறைவாக சம்பாதிக்கும் குடும்பங்கள் தங்கள் குடும்பத்தின் முழு பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ₹500 செலுத்தும் சந்தாதாரர் அல்லாத திட்டம் ஒன்றும் இருந்தது.

**ஒரு அர்ப்பணிப்பின் பயணம்**

VHS-யுடன் டாக்டர். சுரேஷின் தொடர்பு 1976-யில் அவர் மருத்துவ அதிகாரியாக சேர்ந்தபோது தொடங்கியது. "1976 முதல் 1982 வரை, நான் ஒரு கௌரவ ஆலோசகராக, ஒரு நாளைக்கு 8 மணிநேரம், ஒரு வாரத்திற்கு 6 நாட்கள் மற்றும் ஒரு மாதத்திற்கு 10 இரவுகள் என வேலை செய்தேன். எந்த வித நவீன தொழில்நுட்பமும் இல்லாத காலகட்டத்தில், மருத்துவமனையில் இருந்த 250 நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கும் ஒரே மருத்துவராக அப்போது நான் இருந்தேன்"என்று அவர் நினைவு கூர்ந்தார். தொழில்நுட்பம் வளர்ந்ததால், இந்த புதிய தொழில் நுட்பத்தை நடைமுறைப்படுத்தும் செலவுகள் அதிகரித்த போது, நோயாளிகளுக்கான சிகிச்சையின் செலவுகளை அதிகரிக்காமல் இருக்க வேண்டிய பெரும் சவாலை VHS எதிர்கொண்டது.

2012 ஆம் ஆண்டில், டாக்டர். சுரேஷ் VHS-யின் கௌரவ செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அவர் அப்போது இருந்த அமைப்பு முறையை சீரமைக்கும் பணியில் தீவிரமாக இறங்கினார். "அப்போது மிகப் பெரிய சவாலாக இருந்தது நிதி. செலவுகளை அதிகரிக்காமல் நவீன உபகரணங்கள் கொண்டு சிறந்த சிகிச்சை வழங்க வேண்டிய நிலை இருந்தது." என்று டாக்டர். சுரேஷ் விளக்குகிறார். இதை சமாளிக்க, நிதி, மனித வளத்துறை மற்றும் மேலாண்மை துறையில் சிறந்து விளங்கிய நிபுணர்களை கொண்ட ஒரு குழுவை அவர் உருவாக்கினார். இந்த குழு எட்டு மாதங்கள் முழுமையாக ஆய்ந்து, ஆராய்ந்த பிறகு, எதிர்காலத்திற்கான ஒரு திட்டத்தை வழங்கினர். இந்த திட்டத்திற்கு VHS குழுவும் ஒப்புதல் அளிக்க, இது மருத்துவமனையின் வரலாற்றில் ஒரு பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

**அனைவருக்கும் தொழில்நுட்பம்**

"எங்களின் கனவு சிறந்த தொழில்நுட்பத்தை சாமானிய மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே! குறைந்த வருமானம் ஈட்டும் நோயாளிகளுக்கு அவர்களின் நோய் பற்றிய விவரம் கண்டறியவும், சிறிய நேரத்தில் அதிக நோயாளிகளுக்கு தேவையான சிறந்த சிகிச்சை அளிக்கவும், உயர்ந்த தொழில்நுட்பம் கொண்ட அமைப்பு மிகவும் முக்கியம்" என்று டாக்டர். சுரேஷ் வலியுறுத்துகிறார். நோய் தடுப்பு மருந்துத் துறையில் கவனம் செலுத்தியதோடு, பொது சுகாதாரம் மற்றும் நோய்களைப் பற்றிய விழிப்புணர்ச்சியையும் சமூகத்திற்குக் கற்பிக்க, VHS 50 கிலோமீட்டர் சுற்றளவில் 10 ஆரம்ப சுகாதார மையங்களை இயக்கியது. ரோட்டரி கிளப்புடன் இணைந்து நீரிழிவு விழித்திரை நோயறிதலுக்கான ஆரஞ்சு மையம் உள்ளடங்கிய ஆறு சுகாதார மையங்கள் இன்றும் இயங்கி கொண்டிருக்கின்றன.

பரிவு, கருணை மற்றும் செலவுக்குள் அடங்கிய பராமரிப்பு என்பது VHS-யின் தனிச்சிறப்பு. உடல் சுகாதாரம் மற்றும் சிகிச்சை என்பது அனைவருக்கும் ஏதுவானவாதாகவும், மலிவாகவும், எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று டாக்டர். சுரேஷின் குடும்பம் உறுதியாக நம்பியது. "மருத்துவமனைகள், உடல் சுகாதாரம் மற்றும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதை லாப மையமாக பார்க்கக்கூடாது. வரும் லாபத்தை VHS அமைப்பு செய்வது போல, மீண்டும் மருத்துவமனைகளிலேயே முதலீடு செய்ய வேண்டும்," என்று அவர் வலியுறுத்துகிறார்.

**சேவைகள் மற்றும் சமூக ஆதரவை விரிவுபடுத்துதல்**

VHS அதன் சேவைகளை குறிப்பிடத்தக்க வகையில் விரிவுபடுத்தியது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு சென்று போதைப் பழக்கத்திலிருந்து விடுபட ஆலோசனைகள் வழங்கும் சிறந்த டி-அடிக்ஷன் மையங்கள் இந்த மருத்துவமனையில் உள்ளடங்கி உள்ளது. அனாதைகளுக்கான 'சேவா சமாஜம் குழந்தைகள் இல்லம்' VHS-யிலிருந்து அடிப்படை சுகாதார பராமரிப்பைப் பெறுகிறது. இவை மட்டுமன்றி, மருத்துவமனையின்




இரத்த வங்கியானது, மாதந்தோறும் 350 தலசீமியா குழந்தைகளுக்கு இலவச இரத்தம் கொடுத்து உதவுகிறது.

VHS-யில் உள்ள ப்ராஜக்ட்ஸ் பிரிவு, பல்வேறு களப்பணி முயற்சிகளை மேற்கொள்கிறது. அதில் ஒரு குறிப்பிடத்தக்க திட்டமானது, எச்.ஐ.வி தடுப்புக்கான நரம்பு மையம் இந்தியா முழுவதும் மற்றும் எட்டு பிற நாடுகளில் செயல்படுவதாகும். மற்றொரு திட்டமானது, திருநங்கைகள் ஒன்றிணைந்து ஆதரவைப் பெற உதவியுள்ளது. VHS-யில் உள்ள 'தொற்று நோய் மருத்துவ மையம்' விரிவான ஆராய்ச்சி மற்றும் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதோடு, இதுவரை 900 பதிப்புகளை வெளியிட்டுள்ளன. நீரிழிவு மற்றும் உட்சுரப்பியல் துறைகள் மிகவும் சுறுசுறுப்பாக செயல்பட்டு, 'சஹோதரி திட்டம்' என்ற திட்டத்தின் மூலம் ஒரு வருடத்திற்கு தேவையான சர்க்கரை நோய்க்கான மருந்துகளை பெண்களுக்கு இலவசமாக வழங்கி ஆதரவளித்து வருகின்றன.

**பான்டெமிக்கின் போது VHS- யின் சேவை**

சமூகத்தில் COVID-19 தொற்றுநோய் பரவிய போது, VHS-யின் மீண்டெழும் தன்மை மற்றும் சமூக உணர்வும் சோதிக்கப்பட்டது. கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போது, நல்ல தரமான சிகிச்சையையும், பராமரிப்பையும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திலேயே VHS வழங்கி சமாளித்தது. இந்த தருணத்தில் சமூகத்தின் புரிதலும் மற்றும் தன்னார்வலர்களின் ஆதரவும் மிக அவசியமாக இருந்தது. ரோட்டரி கிளப், மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு முழு வார்டின் அமைப்பையே மாற்றியது. மேலும், சன்மார் முழு இமேஜிங் துறைக்கும் நிதியளித்து, VHS-யின் இமேஜிங் துறையை 'பல சேவைகளுக்கும் ஒரே ஆராய்ச்சி மையமாக' மாற்றியது.

**வழிகாட்டும் கோட்பாடுகள் மற்றும் முக்கிய கொள்கைகள்**

VHS மூன்று வழிகாட்டுதல் கொள்கைகளால் செயல்படுகிறது:
சுத்தமான VHS: தூய்மை மற்றும் சுகாதாரத்தை பராமரித்தல்.
பசுமையான VHS: நோயாளி விரைவாக குணமடைய இயற்கையான சூழலை உருவாக்குதல்.
சந்தோஷமான VHS: பணியாளர்கள் மகிழ்ச்சியாக இருப்பதை உறுதி செய்தால், அது அவர்கள் நோயாளிகளை நன்கு கவனிப்பதற்கு வழி வகுக்கும். "உடல் நல பராமரிப்பும், கவனிப்பும் இதயத்திலிருந்து வர வேண்டும்.
VHS குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ள இந்த மாற்றத்தை, நிச்சயம் எல்லோராலும் உணர முடியும். நம்மால் நிறைய சிரிப்பலைகளைப் பார்க்க முடிகிறது"என்கிறார் டாக்டர். சுரேஷ்.
69 வருடங்களாக இயங்கும் VHS மருத்துவமனை, டாக்டர். சஞ்சீவியின் பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.
"இந்த மருத்துவமனை சமூகத்திற்காக, மற்றும் சமூகத்தாலேயே செயல்படுகிறது. நாங்கள் வெறும் வழிப்போக்கர்கள் தான்," என்று டாக்டர். சுரேஷ் சிலாகிக்கிறார்.

**தலைமுறைகளை இணைக்கும் பாலம்**

இளைய தலைமுறை மருத்துவர்களோடு உரையாற்றிய டாக்டர். சுரேஷ், நோயாளிகள் நம் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.
"ஒவ்வொரு மருத்துவரும் தங்கள் நோயாளிகளிடம் நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.
அவர்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஏற்ப செயல்படுங்கள். 'எங்களுக்கு சேவை செய்யும் மக்களுக்கு நாங்கள் சேவை செய்கிறோம்', என்று நம் லோகோ சொல்லுவதற்கேற்ப நாம் பெருமையுடன் வாழ வேண்டும்" என்கிறார்.

**மனித நேயத்தின் ஒரு பாரம்பரிய கூடம்**

டாக்டர் சுரேஷ் விவரித்தபடி VHS- யின் பயணம் பல நினைவுகளைக் கிளறுகிறது. "VHS பற்றி பேசுவது எப்போதுமே ஒரு பெருமைக்குரிய விஷயம். அதற்கு முடிவே இல்லை;
ஒவ்வொரு மைல்கல்லும் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று எங்களுக்கு அதிக உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது," என்று அவர் பகிர்ந்தார். அவர்களின் பணிக்கு கிடைத்த அங்கீகாரமும், பாராட்டும் அவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக இருப்பதோடு, அவர்களுக்கு ஒரு மகத்தான பொறுப்பு உணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது, என்றார். "இன்று VHS இன் வெற்றிக்குப் பின்னால் COO, CFO, HR கொண்டு இயங்கும் ஒரு அருமையான குழு எங்களிடம் உள்ளது. அவர்கள் சமூகத்திற்கும் மருத்துவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறார்கள். சரியான நேரத்தில், சரியான நபர்கள், சரியான விஷயங்களைச் செய்வது, VHS- யின் வெற்றிக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது," என்று டாக்டர் சுரேஷ் சொல்கிறார்.

**எதிர்கால சந்ததியினருக்கான ஒரு முன்னோடி**

VHS-யின் கதையானது, உடல் நல பராமரிப்பு மற்றும் சிறந்த சிகிச்சைக்கான சேவையை வழங்குவதை சொல்வதற்காக மட்டுமல்ல!! எப்படிப்பட்ட நிதி நிலைமையும் கொண்ட ஒவ்வொரு தனி நபருக்கும், அதைப் பற்றிய கவலை இல்லாமல் நல்ல உயர்தர மருத்துவ சிகிச்சை அவர்களுக்கு கிடைக்கக் கூடிய ஒரு இரக்கமுள்ள சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே! டாக்டர். சஞ்சீவி அவர்களின் பாரம்பரியம், மற்றும் டாக்டர். சுரேஷ் போன்ற பல அர்ப்பணிப்பு உள்ளம் கொண்ட மருத்துவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளாலும், VHS மக்கள் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும், சமூகம் சார்ந்த சுகாதாரப் பாதுகாப்புக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

VHS-யின் தற்போதைய பயணம், நம்பிக்கை, புதுமையான தொழில் நுட்பம் மற்றும் பரிவு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, இதே துறையில் வளரும் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு உத்வேகமாகவும் செயல்படுகிறது.
டாக்டர். சுரேஷ் மீண்டும், "எங்களுக்குச் சேவை செய்யும் மக்களுக்கு நாங்கள் சேவை செய்கிறோம்" என்று VHS-யின் உயிர் நாடியான சொற்றொடரை சொல்கிறார்.

**VHS-யின் ஆக்கசக்தி**

VHS அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உணர்வையும், உடல்நலப் பராமரிப்பில் சிறந்து விளங்குவதற்கான அளவற்ற விருப்பத்தையும், பரிவும் கருணையும் கொண்ட பராமரிப்பையும் உள்ளடக்கி கொண்டிருக்கிறது. தன்னலமற்ற சேவை ஒன்றை மட்டுமே அடித்தளமாக கொண்டு கட்டப்பட்ட இந்த நிறுவனம், கருணை நிறைந்த இதயத்தோடு செயல்பட்டால், உடல் ஆரோக்கிம் என்பது இந்த உலகத்தில் ஒரு சக்திவாய்ந்த சக்தியாக இருக்க முடியும் என்பதை நிரூபித்து, தொடர்ந்து ஊக்கமளித்து மேம்படுத்துகிறது. சென்னையின் உண்மையான சாம்பியனின் அடையாளமாக, பரிவு, கருணை, மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு எவ்வாறு சமூகத்தை மாற்றும், எவ்வாறு சுகாதாரத் தரத்தை உயர்த்தும் என்பதற்கு VHS ஒரு சிறந்த எடுத்துக்காட் டாக விளங்குகிறது.

**சுபாஷிணி கோமேஸ்வரன்**